## மாகாணக்கல்வித் திணைக்களம்
## வடக்குமாகாணம்
### ஆறாம் தவணைப் பரீட்சை - 2024

| தரம் - 13 | கிறிஸ்தவ நாகரிகம் | 49 | I | இரண்டு மணித்தியாலம் |
|---|---|---|---|---|

பகுதி I

❖ **மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

01) இயேசுவின் அன்பு மிகுந்த லாசரும் அவரது சகோதரிகளான மாரத்தாவும் மரியாவும் வாழ்ந்த இடம்
(1) பெத்சாய்தா (2) திபேரியா (3) பெத்தானியா (4) எரிக்கோ (5) எப்ரோன்

02) "அனைத்து நிகழ்வுகளும் விதி எனும் நியதியினால் நிர்ணயிக்கப்பட்டது" எனும் சிந்தனையைக் கொண்ட கிரேக்க மெய்யியல் எது?
(1) நொஸ்திக்கம் (2) ஸ்தொயிக்கம் (3) பிளேட்டோனிசம்
(4) அரிஸ்ரோட்லிசம் (5) கெல்லனிசம்

03) திருவிவிலியத்தை இலத்தீன் மொழிக்கு பெயர்த்தவர் யார்?
(1) புனித ஜெரோம் (2) தமாஸ்கஸ் (3) தமியான்
(4) காஸ்மாஸ் (5) புனித பெலிக்ஸ்

04) இயேசு உருமாற்றம் அடைந்த மலை எது
(1) ஏபாவ் மலை (2) கார்மேல் மலை (3) கெரிசிம் மலை
(4) மோவாவு மலை (5) தபோர் மலை

05) நைல் நதியை அடிப்படையாக கொண்டு தோற்றம் பெற்ற நாகரிகம்
(1) மொசப்பதேமிய நாகரிகம் (2) உரோமைய நாகரிகம் (3) கிரேக்க நாகரிகம்
(4) எகிப்திய நாகரிகம் (5) கிழக்காசிய நாகரிகம்

06) ஒத்தானியேல் இஸ்ராயேல் மக்களை எம் மன்னனிடமிருந்து மீட்டார்
(1) யாபின் (2) கூசான் ரிசாத்தாய் (3) சாலமோன் (4) தாவீது (5) சவுல்

07) இஸ்ரயேல் மக்களை ஆட்சி செய்த இறுதி நீதித் தலைவர் யார்
(1) ஒத்தானியேல் (2) தெபோரா (3) யோசுவா (4) சாமுவேல் (5) கிதியோன்

08) யூத சமய சமூக கலாச்சார மறுமலர்ச்சிக்கு பெரும் பங்களிப்பு ஆற்றியவர்கள்
(1) எலியா, எலிசேயு (2) எஸ்ரா, நெக்கமியா (3) எஸ்ரா, எசாயா
(4) மீக்கா, நெகேமியா (5) ஆமோஸ், மீக்கயா

09) யூத சமாரிய அலுவலர்கள் குற்றம் சாட்டியதால் பதவி நீக்கம் செய்யப்பட்டவர்
(1) பிலிப்பு (2) ஏரோது அந்திப்பா (3) பெரிய ஏரோது
(4) அக்ரிப்பா (5) அர்க்கெலா

10) பாகால் தெய்வ வழிபாட்டை கடுமையாக எதிர்த்த இறைவாக்கினர்கள்
(1) எலியா (2) எசாயா (3) எரேமியா (4) ஆமோஸ் (5) எசேக்கியேல்

11) அரசியல் நோக்கத்திற்காக பரிசேயர்களின் ஒழுக்க முறைகளை கடைப்பிடிப்பவராகக் காட்டிக் கொண்டவர் யார்
(1) அர்க்கெலா (2) அக்கிரிப்பா (3) பிலிப்பு
(4) ஏரோது அந்திப்பா (5) பெரிய ஏரோது

12) கடவுளே ஒரே அரசர் எனும் கொள்கையை கடைப்பிடித்தவர் யார்
(1) சதுசேயர் (2) எசீனியர் (3) பரிசேயர்
(4) தீவிரவாதிகள் (5) மறைநூல் அறிஞர்

13) திஸ்ரி மாதம் 15ம் நாளின் பின் 8 நாட்கள் தொடர்ச்சியாக கொண்டாடப்படும் விழா
(1) கூடாரத் திருவிழா (2) பாஸ்கா விழா (3) பெந்தக்கோஸ்தே திருவிழா
(4) புளியாத அப்பத்திருவிழா (5) ஆலய அர்ப்பணவிழா

14) யூதர்களின் உடன்படிக்கைச் சின்னம் என கருதப்படுவது
(1) யோம் கிப்பர் (2) நோன்பு (3) ஈகை
(4) சபாத் (5) சுத்திகரிப்புமுறை

15) யோம் கீப்பர் என அழைக்கப்படும் யூதர்களின் விழா எது?
(1) பாஸ்கா விழா (2) பாவக்கழுவாய் விழா (3) கூடாரத் திருவிழா
(4) பெந்தன் கோஸ்தே விழா (5) ஆலய அர்ப்பண விழா

16) இயேசுவின் இறையரசின் அறிவிப்பை ஐந்து அறிவுரைகளாக எமக்கு தரும் நற்செய்தியாளர்
(1) மத்தேயு (2) லூக்கா (3) மாற்கு (4) யோவான் (5) பவுல்

17) திருத்தந்தை 2வது சிக்ஸ்ரஸ், ஆறு திருத்தொண்டர்கள் தூய லோறன்சியார் தூய சிப்பரியன் போன்றோர் மறைசாட்சிகளாக மரித்த ஆண்டு
(1) கி.பி 274 - 275 (2) கி.பி 235 - 238 (3) கி.பி 257 - 260
(4) கி.பி 161 - 180 (5) கி.பி 202 - 211

18) விசுவாசத்தின் தூணாக இருந்து வேத விளக்கம், ஆரியரின் வரலாறு, இறைவார்த்தை மனுவுருவாதல் போன்ற நூல்களை எழுதி மேலைத்தேய நாட்டிற்கு துறவற வாழ்க்கையை அறிமுகம் செய்தவர்
(1) வனத்து அந்தோனியார் (2) தூய பக்கோமியுஸ் (3) தூய பெனடிக்ற்
(4) தூய அத்தனா சியுஸ் (5) தூய பசில்

19) எருசலேம் சங்கத் தீர்மானங்களை அறிவித்து கிறிஸ்தவர்களை ______________________ இப்பயணத்தின் நோக்கமாகும்
(1) சமூகங்கங்களாக கட்டியெழுப்புதல்
(2) ஊக்குவித்து உறுதிப்படுத்தல்
(3) தனித்துவமான மனிதராக மாற்றுதல்.
(4) தீர்மானம் எடுக்க செய்தல்.
(5) உலகின் கடையெல்லை வரை நற்செய்தியை அறிவித்தல்

20) பின்வருவனவற்றுள் சரியான கூற்றை தெரிவு செய்க.
(1) ஒரேபு மலையில் தோற்றம் மாறினார் இயேசு
(2) இயேசு பெத்தானியாவில் உருமாறினார்
(3) சீனாய் உடன்படிக்கையின் வெளிப்பாடு பத்துக்கட்டளை
(4) இயேசுவின் இறப்பிற்கு அவரது புதுமைகள் பொருள் தருகின்றது.
(5) வட அரசின் முதல் மன்னன் ரெகபெயாம் ஆவார்.

21) இயேசுவின் மரணம் குறித்து யோவான் குறிப்பிடும் மூன்று விடயங்கள்
(1) பிலாத்துவின் அறிக்கை, இயேசுவின் அங்கி பகிரப்படல், சிலுவையின் அருகில் தாய் மரியாளும் சில பெண்களும் அன்பு சீடரும் இருத்தல்.
(2) பாடுகளின் முன்னறிவிப்பு, சீடர்களின் புரிந்து கொள்ளாமை, இயேசுவின் விளக்கம்
(3) இயேசுவின் மரண விசாரணை, கைது செய்தல், சிலுவையில் தொங்கவிடல்
(4) இயேசுவிற்கு முள்முடி சூட்டல், கசை அடி, பிலாத்துவின் அறிக்கை
(5) பாடுகளின் முன்னறிவுப்பு, சிலுவையை சுமத்தல், பிலாத்துவின் அறிக்கை

22) கைம் பெண்ணின் மகன் உயிர் பெற்றெழுதல் குறிப்பிடப்படும் வேதாகமப் பகுதி

(1) தூயமாற்கு 6 : 30 - 44 (2) தூயலூக்கா 7 : 11 - 17 (3) தூயமத்தேயு 5 : 1 - 13

(4) தூயலூக்கா 10 : 7 - 15 (5) தூயலூக்கா 5 : 7 - 12

23) "அகாப்பே" என்பதன் பொருள்

(1) சபாத் நாள் (2) கிறிஸ்துவுக்கு சான்றுபகர்தல்

(3) தொடக்க கிறிஸ்தவர்களின் அன்பின் விருந்து (4) ஒரு வகை ஆன்மிக செபம்

(5) ஒன்றித்து வாழல்

24) கத்தோலிக்க திருச்சபை என்ற பதத்தினை முதல் முதலில் பயன்படுத்தியவர்

(1) தூய அகுஸ்தீனார் (2) தூய இராணேயுஸ் (3) தூய பவுல்

(4) தூய இஞ்ஞாசியார் (5) தூய யஸ்ரின்

25) நான்காம் கலாபனையில் கிறிஸ்தவ விசுவாசத்தைக் கட்டியெழுப்பிய மூவரைக் கொண்ட தொகுதி

(1) புனித பேதுரு, புனித பவுல், புனித யோவான்

(2) இஞ்ஞாசியார், சிமியோன், சிப்பிரியன்

(3) யுஸ்தினார், சிசிலியம்மாள், போதினுஸ்

(4) பபியன், ஒரிஜின், டனியஸ்

(5) பெப்பத்துலா, பெளசித்தா, இரணியுஸ்

26) பின்வருவற்றுள் பேதுருவின் முதல் உரையின் சாரம்சங்களுள் தவறான கூற்று

(1) இயேசுவே ஆண்டவராகிய மெசியா

(2) யூதர்கள் அவரை கழுமரத்தில் ஏற்றிக்கொன்றார்கள்

(3) மூன்றாம் நாள் மரித்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார்.

(4) அதற்கு நாங்கள் சாட்சிகள்

(5) இயேசுவின் மீது நம்பிக்கை வைத்தல்.

27) கி.பி 380ல் கிறிஸ்தவம் யாருடைய காலத்திவ் அரசமதமாக பிரகடனம் செய்யப்பட்டது.

(1) பேரரசர் மார்க்கு அவுரேலியன் (2) பேரரசர் வலேரியன்

(3) பேரரசர் கொன்சாந்தின் (4) பேரரசர் திராஜன்

(5) பேரரசர் தியோடோசியஸ்

28) கலப்பினமாக கருதப்பட்ட இனம்

(1) பாவிகள் (2) கானானியர் (3) யூதர்கள் (4) எகிப்தியர் (5) சமாரியர்

29) "அருட்கொடைகள்" என்ற பொருள் குறிக்கும் கிரேக்கு சொல்

(1) பருசியா (2) காரிஸ்மா (3) கொய்னோனியா (4) அகாப்பே (5) தலித்தா கூம்

30) A - கி.பி 50 - 52 காலப்பகுதியில் நடைபெற்றது.

B - கீழைத்தேசத்திலிருந்த கிறிஸ்தவர் மேலைத்தேயத்தில் பரவிச் செல்லவழிவகுத்தது.

C - பர்னபா, யோவான், மாற்கு, தீத்து பயணத்தோழர்கள்

D - எருசலேம் சங்கத்தீர்மானம் எடுத்துக்கூறப்பட்டது.

E - கிறிஸ்தவம் ஒரு தனிமதம் என்ற அடையாளத்தைப் பெற்றது.

மேற்கூறப்பட்ட கூற்றுக்களுன் இரண்டாம் பயணத்துடன் தொடர்புள்ளது.

(1) AB (2) AC (3) CD (4) DE (5) BC

31) பெனடிற் துறவறசபையினரின் பிரதான பணிகளில் ஒன்று

(1) மறைபணி ஆற்றல்

(2) பாடசாலைகளை நிறுவுதல்

(3) விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்தல்

(4) மேலைத்தேயத்தில் துறவற வாழ்வை அறிமுகம் செய்தல்.
(5) ஐரோப்பியக் கோத்திரங்களை கிறிஸ்தவத்திற்கு மனமாற்றுதல்.

32) பின்வரும் கூற்றுக்களில் தவறான கூற்றைத் தெரிவு செய்க.
(1) தூய ஆவியானவர் பிதாவின்று புறப்பட்டு சுதனூடாக வருபவர் என்பது அத்தனாசியாரின் கருத்தாகும்.
(2) திருத்தந்தை 9ம் லியோவின் காலத்தில் இலத்தீன் முறை ஆலயங்கள் மூடப்பட்டது.
(3) பிதாப்பிதாவான மைக்கல் செருலாரியஸ் திருத்தந்தையைப் போல தானும் சரிநிகர் என்று உரிமை கோரினார்.
(4) கீழைத்தேயத் திருச்சபை 1054இல் உரோமைத் திருச்சபையிலிருந்து பிரிந்தது.
(5) திருச்சபை பிளவுபடுபவதற்கு கிறிஸ்தவ சபையின் தலைமைத்துவம் பற்றிய கருத்து வேறுபாடும் ஒரு காரணமாகும்.

33) பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A - திருத்தந்தை 8ம் கிரகோரியார் சிலுவைப்போருக்கு அறைகூவல் விடுத்தார்.
B - 50,000 படைவீரர்கள் சிலுவைப்போரில் பங்கேற்றனர்.
C - இப்போரில் மன்னன் கலந்து கொள்ளவில்லை.
D - திருத்தந்தை யூஜின் இப்போருக்கு வேண்டுகோள் விடுத்தனர்.
E - புனித பெர்நர்தும் இப்போருக்கு ஆதரவாக இருந்தார்
(1) ABC (2) BDE (3) CDE (4) ACE (5) BCE

34) 3வது இலத்திரன் சங்கம் எத்துறவற சபையினரின் பணியைப் பாராட்டியது
(1) திரிதெந்தீன் சங்கம் (2) இராண்டாம் வத்திக்கான் சங்கம்
(3) முதலாம் வத்திக்கான் சங்கம் (4) இலத்தரன் சங்கம்
(5) கார்த்தேஜ் சங்கம்

35) இஸ்லாமியரை மனந்திருப்புவதற்காகப் புனித பூமிக்குச் சென்றவர்
(1) பிரான்சிஸ் அசிசி (2) பீற்றர் வால்டோ (3) லொயோலா இக்னேசியஸ்
(4) சைமன் ஸ்டொக் (5) டொமினிக் டி கூஸ்மான்

36) பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A - மனிதனின் பரிணாமத்தைப் பற்றிய ஆன்மிக தத்துவத்தை விளக்கி ஒரு நூலை எழுதினார்.
B - பௌதீகத்திற்காக நோபிள் பரிசு பெற்ற கிறிஸ்தவ விஞ்ஞானி
C - விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களின் வழியே திருவிவிலியத்தைக் கற்று அதனை ஆய்வு செய்த விஞ்ஞானி
இக்கூற்றுக்களுடன் தொடர்புடையவர்கள்
(1) கிரஹம்பெல், ஐன்ஸ்டயின், நியூட்டன் (2) சார்டேன், கிரஹம்பெல், நியூட்டன்
(3) சார்டேன், ஐன்ஸ்டயின், நியூட்டன் (4) சார்டேன், பிளமிங், ஐன்ஸ்டயின்
(5) நியூட்டன், பிளமிங், சார்டேன்

37) புனித அகுஸ்தினாரின் பிறப்பிடம்
(1) ஸ்பெயின் நாட்டிலுள்ள காஸ்டிஸ் என்னும் ஊரைச் சேர்ந்தவர்
(2) வட ஆபிரிக்காவின் தகாஸ்தே என்னும் இடத்தைச் சேர்ந்தவர்
(3) ஸ்கொட்லாந்தில் அயேஷர் நகரில் லொஜ்பீல்ட் என்னும் ஊரைச் சேர்ந்தவர்
(4) இங்கிலாந்தில் வுலஸ்தேவ் என்னும் கிராமத்தை சேர்ந்தவர்
(5) ஸ்கொட்லாந்தின் எடின்பரோ என்னும் நகரைச் சேர்ந்தவர்

38) "நான் தொடர்ந்து வாழும் எனது சிற்றறை இனிமையாக வளர்ந்து வருகிறது. என் இனிய நண்பன் அது என ஆறுதல் அதுவே" என்ற கூற்றுடன் தொடர்புடையவர்.

(1) அவிலா திரேசா (2) டான்ரே அலிகியேரி (3) சிலுவை யோவான்
(4) தோமஸ் ஆ கெம்பே (5) புனித அகுஸ்தினார்

39) கதீற்றற் பாடசாலைகளின் நோக்கமாவது

(1) இசைக்கல்விக்கு முக்கியத்துவம் வழங்கல்
(2) சமுதாயத்திற்குத் தேவையான நற்பண்புகளை வளர்த்தெடுத்தல்.
(3) பங்குப்பாடசாலைகளால் வழங்க முடியாதிருந்த உயர்கல்வியை வழங்குதல்.
(4) வேறுபாடற்ற கல்வியை வழங்குதல்.
(5) குருக்கள் வேண்டிய அடிப்படைப் பயிற்சியை வழங்குதல்.

40) பிலிப்போ புறநெலச்சி என்பவர்

(1) முதல் மறுமலர்ச்சிக்கால கட்டிடக்கலைஞர்
(2) நிகழ்கால சித்திரக்கலையின் தந்தை
(3) பாடற் திருப்பலியின் ஒருங்கமைப்பாளர்
(4) தெய்வீக ஓவியர்
(5) ஓரத்தோரியோ இசைக்கு வித்திட்டவர்

41) இறைவன் தமது நீட்டிய கரத்தினால் ஆதாமின் கரத்திற்கு உயிர் கொடுக்கும் காட்சி

(1) இறுதித்தீர்ப்பு ஓவியத்தில் காணப்படுகின்றது
(2) உலகப்படைப்பு சித்திரத்தில் காணப்படுகின்றது
(3) மொடோனா இறை அன்னையின் சித்திரத்தில் காணப்படுகின்றது.
(4) டொமிற்றிவாலின் கற்றறையில் வரையப்பட்ட சுவர்ச்சித்திரத்தில் காணப்படுகின்றது.
(5) தியானத்தின் புனித திரேசா என்ற சிற்பத்தில்

42) கீழ்வருபவற்றைக் கவனத்திற் கொள்க.

A - திருத்தந்தையின் நிர்வாகத்தை ஏற்றுக் கொள்ளல்
B - மேற்கு சீரிய மரபோடு தொடர்பினைப் பேணல்.
C - சங்க அமைப்பு முறையினை ஏற்றுக் கொள்ளுதல்.
D - வழிபாட்டில் திருப்பலிக்கு முக்கியத்தவம் கொடுத்தல்
E - கீழேத்தேயத் திருச்சபையின் பிதாப்பிதாக்கள் முறையே ஒத்ததாகக் காணப்படல்.

மேற்குறித்தவற்றுள் சீரோ மலபார் திருச்சபை குறித்த மிகச் சரியான கூற்றுக்களாவன

(1) ABC (2) ACD (3) ACE (4) BCD (5) CDE

43) ஜப்பானில் நாகசாக்கி நகரத்தை தம் பணித்தளத்தினை மையமாகக் கொண்டவர்கள்

(1) கார்மேல் சபையினர் (2) பிரான்சிஸ்கள் சபையினர் (3) டொமினிக்கன் சபையினர்
(4) இயேசு சபையினர் (5) பெனடிற் சபையினர்

44) பின்வருவனற்றுள் மிகச் சரியான சோடி யாது

(1) தெல்லிப்பளை பேதுருப் புலவர் - சிங்கள இலக்கண நூல்
(2) சிலாபம் - உடன்படிக்கையும் அன்னை மரியாளும்
(3) மாத்தறை - கிறிஸ்து பிறப்பு
(4) அருட்பணி பியரேபேகு - சவுலின் திருமுகம்
(5) அருட்பணி பேதோ பிரான்சிஸ்கோ - புனிதர்களின் வாழ்க்கை வரலாறு

45) புனித ஜோசவ்வாஸ் கத்தோலிக்கரின் வாழ்வில் பல மாற்றங்களையும் விசுவாசத்தில் உறுதிப்பாட்டையும் தோற்றுவிக்காரணமாய் அமைபவை

(1) உலகப் பற்றற்ற வாழ்க்கை, இச்சையடக்கம், உபவாசம்

(2) நீண்ட மறையுரைகள், உணவுப்பழக்கவழக்கம், தப்பறைகளைக் கண்டித்தல்.
(3) பற்றற்ற வாழ்க்கை, மரியாதையான நடத்தை, நீண்ட மறையுரைகள்
(4) பற்றற்ற வாழ்க்கை, உபவாசம், தப்பறைகளைக் கண்டித்தல்
(5) மரியாதையான நடத்தை, உபவாசம், ஆலயங்களைக் கட்டுதல்

46) ஆங்கிலேயர் காலத்தில் அமலமரித்தியாகிகள் துறவற சபையினர் இலங்கைக்கு வருகை தந்தமை
(1) ஜோசவ்வாஸ் அடிகளாரின் வேண்டுகோளுக்கிணங்க
(2) ஆயர் கிறிஸ்தோப்பர் பொஞ்சினின் வேண்டுகோளுக்கிணங்க
(3) ஆயர் கிறிஸ்தியன் டேவிட் அவர்களின் வேண்டுளுக்கிணங்க
(4) யாக்கோமே கொண்சால்வெஸ் அடிகளாரின் வேண்டுகோளுக்கிணங்க
(5) ஆயர் பெற்றக்கீனியின் வேண்டுகோளுக்கிணங்க

47) 'நேர்மையுள்ள நாடு உயர்வடையும், பாவம்ட நிறைந்த எந்த நாடும் இழிவடையும்' என்ற மகுட வாசகத்தை மையமாகக் கொண்ட பத்திரிகை
(1) ஞானார்த்த பிரதீபய (2) பக்திப் பிரபோதன (3) பாதுகாவலன்
(4) உதயதாரகை (5) மன்னாவின் மகுடம்

48) முகத்துவாரம் புனித யாகப்பர் ஆலயத்தில் சித்திரங்களை வரைந்தவர்
(1) பெசலேல் நவரத்ன (2) போல் நவரத்ன (3) ஹென்றிக்கஸ்
(4) தொன் ஜெரோனிமோ (5) எம்மானுவேல் கொஸ்தா

49) திருத்தந்தை 13ம் லியோவின் எழுதப்பட்ட சுற்றுமடல்
(1) சமூக ஒழுங்கமைப்பு (2) தொழிலாளர் நிலமை (3) நூறாவது ஆண்டு
(4) மனித உழைப்பு (5) அன்னையும் ஆசிரியையும்

50) ஆசிய கிறிஸ்தவ சம்மேளம் உருவாக்கப்பட்டது.
(1) இந்தோகேசியாவில் (2) இலங்கையில் (3) அவுஸ்திரேலியாவில்
(4) பிலிப்பைன்சில் (5) தென் கொரியாவில்

**மாகாணக்கல்வித் திணைக்களம்**
**வடக்குமாகாணம்**
**ஆறாம் தவணைப் பரீட்சை - 2024**

| தரம் - 13 | கிறிஸ்தவ நாகரிகம் | 49 | II | மூன்று மணி 10 நிமிடம் |
|---|---|---|---|---|

பகுதி II

அறிவுறுத்தல்கள்

- ❖ பகுதி I இலிருந்து **இரண்டு** வினாக்களையும் பகுதி II இலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

**பகுதி I**

*01)*

i) பலன்தீனாவின் கிழக்கு மலைப்பகுதியில் அடங்கும் நான்கு இடங்களைப் பெயரிடுக.

ii) பெந்தக்கோஸ்தே நிகழ்வையடுத்து பேதுரு ஆற்றிய உரையின் சாரம்சம் நான்கு எழுதுக.

iii) சீடத்துவம் பற்றிய மூன்று படிப்பினைகளை மாற்கு நற்செய்தியினூடாக விளக்குக.

iv) யூத மத நிறுவனங்களில் இரண்டினைப் பெயரிட்டு, அவற்றின் முக்கியத்துவம் குறித்து விளக்குக. (2+4+6+8=20 புள்ளிகள்)

*02)*

i) முதலாம் நூற்றாண்டில் உரோமைய கலாபனைக் காலத்தில் மறைசாட்சி முடி தரித்த நால்வரைப் பெயரிடுக.

ii) மிலான் அரச சாசனத்தின் சாதக, பாதக விளைவுகள் இவ்விரண்டு எழுதுக.

iii) 4ம், 5ம் நூற்றாண்டுகளில் திருச்சபையின் போதனைக்களுக்கு எதிராக எடுத்த மூன்று தப்பறைப் போதனைகளையும், அவற்றின் சங்க நடவடிக்கைகளையும் குறிப்பிடுக.

iv) மேலைத்தேய துறவற சபைகளின் தோற்றம் ஐரோப்பாவில் ஏற்படுத்திய தாக்கங்களுள் இரண்டினை விபரிக்குக. (2+4+6+8=20 புள்ளிகள்)

*03)*

i) விஞ்ஞான வளர்ச்சிக்கு பங்காற்றிய நான்கு கிறிஸ்தவ விஞ்ஞானிகளைப் பெயரிடு, அவர்களின் கண்டுபிடிப்புக்களை எழுதுக.

ii) பறோக் கட்டிடக் கலையின் பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக.

iii) புனித தோமஸ் அக்குவைசின் இறையியல் ஆக்கம் குறித்து விபரிக்குக.

iv) கிறிஸ்தவ கலைப்படைப்புக்களில் உரோமைய பசிலிக்கள், பைசாந்தின் கலைப்படைக்களின் தாக்கங்களை விபரிக்குக. (2+4+6+8=20 புள்ளிகள்)

**பகுதி II**

*04)*

i) "கிறிஸ்தவ ஒற்றுமை" குறித்த பவுலின் போதனைகளை அவரது திருமடலின் ஒளியில் விளக்குக.

ii) கிறிஸ்தவ சமுகங்களுக்கிடையிலான முரண்பாடுகளையும், அவற்றை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகளையும் விபரிக்குக.

05)

i) 6ம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளில் கலாச்சார வளர்ச்சிக்கு முன்னோடிகளாகத் திகழ்ந்த மறைத்தூதுவர்களின் பணியை விபரிக்குக.

ii) பொதுநிலையினராக அழைப்புப் பெற்ற நீர் ஆசிய நாடுகளில் மறைத்தூதுப் பணியை முன்னெடுக்க உம்மால் ஆற்றக் கூடிய பணிகளை விபரிக்குக.

06)

i) யூதத்திருவிழாக்களைக் குறிப்பிட்டு, அவற்றுள் மிகப்பழமை வாய்ந்த திருவிழாக்கள் இரண்டினை விபரிக்குக.

ii) இன்றைய காலகட்டத்தில் திருவிழாக்கள் அர்த்தமுள்ளதாகவும், ஆன்மீக ரீதியாகவும் நடைபெற உம்மால் முன்வைக்ககூடிய ஆலோசனைகளைக் குறிப்பிட்டு விளக்குக.

07)

i) ஒல்லாந்தர் காலத்தில் இலங்கையின் கல்வித்துறையில் ஏற்பட்ட வளர்ச்சி நிலையை விபரிக்குக.

ii) தற்காலத்தில் இலங்கையின் கல்வித்துறையில் ஏற்பட்ட வளர்ச்சிப் போக்கை எடுத்துக் காட்டுக்களுடன் விபரிக்குக.

08)

i) ஆசிய கிறிஸ்தவ சபைகளின் சம்மேளனத்தின் செயற்றிட்டங்களில் ஒன்றான மனித உரிமைகளின் அண்மைக்காலப் போக்குகளையும் அதற்கான பரிந்துரைகளையும் விபரிக்குக.

ii) எமது நாட்டில் இன்று மனித உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்களையும், அதற்கெதிராக முன்னெடுக்ககூடிய நடவடிக்கைகளையும் விபரிக்குக.